**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.**442** நாள்: **03.09.2026**

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மற்றும் வளர்ச்சிப் பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மற்றும் வளர்ச்சிப் பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அம்பத்தூர் மண்டலம், வார்டு-88க்குட்பட்ட பாடி சரவணா ஸ்டோர் பகுதியில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, வார்டு-83க்குட்பட்ட கொரட்டூர் ஏரி, ஒண்டிவீரன் மதகு பகுதி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை விரைந்து முடித்திடவும், மதகினை தயார் நிலையில் வைத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வார்டு-84க்குட்பட்ட ஸ்டேசன் சாலையில் உள்ள திறந்த வெளி இடம், வார்டு-79க்குட்பட்ட கோபால சாமி தெரு மற்றும் ஒரகடம், சென்னை நடுநிலைப் பள்ளியில் பள்ளி மாணவர்களின் காலை உணவுத் திட்டத்திற்கான மைய சமையல் கூடம், அப்பகுதியில் கட்டப்பட்டு வரும் இரவுக் காப்பகம் கட்டுமானப் பணி, வ.உ.சி தெருவில் மாநகராட்சி அலுவலர்கள் வீடுவீடாகச் சென்று மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி, வார்டு-86க்குட்பட்ட அத்திப்பட்டு குப்பைக் கொட்டும் வளாகத்தில் கட்டப்பட்டு வரும் நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையத்தின் இறுதிக் கட்டப் பணி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, கட்டப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திடவும், மைய சமையல் கூடத்தில் உணவின் தரம், உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் சமையலறையினைத் தூய்மையாகப் பராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**